**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.824/அ4/2025, நாள்.02/09/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – SDG-13 மற்றும் Mission LiFE (Lifestyle for Environment) இயக்ககத்தின் கீழ் மாநிலம் முழுவதும் உள்ள பள்ளிகளில் ஒரே நாளில் மரக்கன்று நடுதல் இயக்கம் – அறிவுரை வழங்குதல் – சார்பு

பார்வை சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.00086/எம்1/இ1/2025, நாள். 29.08.2025

•••••

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், காலநிலை மாற்றத்திற்கு எதிராக மாணவர்களிடம் இருந்து தொடங்கும் பொது விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கில், SDG-13 மற்றும் Mission LiFE (Lifestyle for Environment) இயக்ககத்தின் பள்ளிகளில் ஒரே நாளில் மரக்கன்று நடுதல் இயக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும், இது மாணவர்கள் இயற்கையை நேசிக்கும் நெறியில் பயணிக்க ஒரு சிறந்த வழியாக அமையும் மேலும் ஒவ்வொரு மாணவனும் / மாணவியும் பசுமையைப் பேணும் ஒரு செயலில் நேரடியாக பங்கேற்கும் வகையில் கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- ஒவ்வொரு மாணவரும் ஒரு மரக்கன்றை நட்டிட வேண்டும். (பள்ளி, வீடு அல்லது உள்ளூர் சுற்றுச்சூழலில்)
- மரக்கன்றுடன் தாயார் அல்லது பாதுகாவலருடன் எடுத்த புகைப்படம் தயாரிக்க வேண்டும்.
- அந்த புகைப்படம் Eco Clubs for Missions LiFE இணையதளத்தில் http://ecoclubs.education.gov.in/ 10.09.2025க்குள் பதிவேற்றம் செய்து e-certificate பெறவேண்டும்.
- ஒவ்வொரு பள்ளியிலும் பசுமை இயக்கக் குழு பொறுப்பாசிரியர், மாணவர் தூதர்கள் மற்றும் முழு மாணவர் தலைவர்கள் (House Captain) திட்டமிட்டு இந்த நடவடிக்கையை ஒருங்கிணைக்க வேண்டும்.
- மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் (House System) அடிப்படையில் போட்டித் தன்மை உருவாக்கி ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் பங்கேற்புக்கு மதிப்பெண்கள் வழங்கி ஊக்குவிக்க வேண்டும். இது மாணவர்களின் ஆர்வமுள்ள பங்கேற்பை ஊக்குவிக்கும்.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை தொடக்க / நடுநிலை /உயர் / மேல்நிலைப் பள்ளிகள் / தனியார் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்–

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர்,
   முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர் மாவட்டம்.